**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 135 of 2024

DATE : 22.07.2025

Depositions of witness for Prosecution

PW: 3

| Name | பாரத் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | ஜெயபாண்டி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of July 2025

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் கோவிலாங்குளத்தில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் விபத்தில் இறந்து போனவர் எனது மாமா ஆவர். அ.சா.1 தெரியும். கடந்த 17.03.2022 ம் தேதி நத்தம்பட்டியில் இருந்து சிவகாசிக்கு செல்வதற்காக நத்தம்பட்டி பஸ் ஸ்டாப்பிற்கு நடந்து சென்று கொண்டிருந்தோம். எனது மனைவியின் தாய் மாமா முத்தையா என்பவரும், எனது மாமாவும் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அடையாளம் தெரியாத Intra லோடு வாகனம் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்ற வாகனம் எனது மாமா மீது மோதி நிற்காமல் சென்று விட்டது. எனது மனைவியின் தாய் மாமா எங்களுக்கு போன் மூலம் விபத்து நடந்தது பற்றி தகவல் தெரிவித்தார். தகவல் அறிந்து ஆட்டோ மூலம் நானும் எனது அத்தையும், சித்தப்பா சின்ன இருளப்பன் மற்றும் பெரிய இருளப்பன் ஆகியோர்கள் சம்பவயிடத்திற்கு வந்தோம். நாங்கள் வந்து பார்த்த பொழுது எனது மாமா பாலத்துக்கு கீழே காயம்பட்டு கிடந்தார். கீழே கிடந்த எனது மாமாவை தூக்கி பார்த்தேன். எனது மாமாவுக்கு பின்னந்தலையில் பலத்த காயமும் இரண்டு தொடைகளிலும் ரத்தக்காயம் ஏற்பட்டு இருந்தது. பின்னர் 108 ஆம்புலன்ஸ்க்கு எனது மனைவியின் தாய் மாமா முத்தையா போன் செய்தார். 108

ஆம்புலன்ஸில் வந்தவர்கள் எனது மாமாவை பரிசோதனை செய்து பார்த்துவிட்டு இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். எனது மாமா இறந்துவிட்ட காரணத்தினால் 108 ஆம்புலன்ஸில் ஏற்றாமல் சென்று விட்டார்கள். பின்னர் கிருஷ்ணன்கோவிலில் உள்ள Guest ஆம்புலன்ஸிற்க்கு போன் செய்து வர வைத்து திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். மருத்துவமனையில் மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு எனது மாமா இறந்து விட்டதாக தகவல் சொன்னார். பிரேத விசாரணையின் போது உடனிருந்து, சாட்சியாக கையெழுத்து செய்தேன். இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு